**CC No. 65/2024** நாள் : 28.05.2024

அ.சா. 3 திரு. ராமன்

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தருமபுரியில் குடியிருந்து வருகிறேன். கூட்டுறவு சொசைட்டியில் செயலாளராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். நான் அ.சா1ன் வீட்டிற்கு அருகில் குடியிருக்கிறேன். கடந்த 05.11.2023 அன்று அ.சா.1ன் வீட்டு கதவு உடைக்கப்பட்டு பீரோ உடைக்கப்பட்டிருந்ததை நான் தான் அ.சா.1க்கு கூறினேன். அதன்பேரில் அ.சா.1 புகார் கொடுத்தார். மறுநாள் 06.11.2023ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் விசாரணை அதிகாரி சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார். அந்த மகஜரில் நானும் வெங்கடாசலம் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. சம்பவம் குறித்து போலிசார் விசாரித்தபோது நடந்ததை கூறி கையொப்பம் செய்தேன். அ.சா.1க்கு நான் தான் தகவல் சொன்னேன் என்ற சங்கதியை போலிசார் விசாரணையில் கூறினேன். யார் அ.சா.1ன் வீட்டுகதவை உடைத்து திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டின் வரைபடம் வரைந்து அதுசம்மந்தமாக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். சம்பவத்திற்கு மறுநாள் போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

**CC No. 65/2024** நாள் : 28.05.2024

அ.சா. 2 திரு. கோகுல்

**முதல் விசாரணை**

1. நான் தற்போது இலளிகத்தில் குடியிருந்து வருகிறேன். ஜே.சி.பி மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். கடந்த 04.11.2023 ம் தேதியன்று நானும் அ.சா.1 யுடன் அவரது குலதெய்வ கோவிலுக்கு மைசூர் சென்றிருந்தேன். மறுநாள் காலை அ.சா.1 ன் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருப்பவர் போன் செய்து அ.சா1 ன் வீட்டு கதவு உடைக்கப்பட்டிருப்பதாக கூறினார். உடனே நாங்கள் சென்று பார்த்தபோது அ.சா.1 ன் வீட்டு கதவு, பீரோ உடைக்கப்பட்டு சுமார் 58 3/4 பவுன் நகை திருடுபோயிருந்தது. இது சம்மந்தமாக அ.சா.1 தருமபுரி நகர காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும்,கேள்விப்பட்டு தான் தெரியும் என்றாலும் சரிதான். யார் திருடினார்கள் என்று அப்பொழுது தெரியாது. ஒரு மாதம் கழித்து தெரிந்துகொண்டேன். புகார் கொடுக்க அ.சா.1 யுடன் சென்றிருந்தேன். அ.சா.1 எனது சம்மந்தி. ஒரு வாரம் கழித்து நகை கிடைத்த பிறகு தெரியும். போலிசார் என்னை தனியாக விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள்.

**மறுவிசாரணை**

இல்லை.

**CC No. 65/2024** நாள் : 28.05.2024

அ.சா. 1 திரு. சிவராமகிருஷ்ணன்

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது தருமபுரியில் குடியிருந்து வருகிறேன். பொதுப்பணித்துறையில் பணியாற்றி பணி ஓய்வு பெற்றுள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஆஜர் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து பார்த்திருக்கிறேன். கடந்த 04.11.2023ம் தேதியன்று காலை 07.00 மணியளவில் மைசூரில் உள்ள எங்கள் குலதெய்வம் கோவிலுக்கு சென்றிருந்தேன். மறுநாள் காலை 06.00 மணியளவில் எனது பக்கத்து வீட்டுக்காரர் எனக்கு போன் செய்து எனது வீட்டு கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதாக கூறினார்கள். நான் வந்து பார்த்தபோது கதவு மற்றும் பீரோ உடைக்கப்பட்டிருந்தது. பீரோவில் வைத்திருந்த 1. கல் ஆரம், 2. ஆரம், 3. பிரேஸ்லெட் ஒன்று, 4. கோல்ட் வாட்ச் ஒன்று, 5. சிறு சிறு தோடுகள், 6. மினி ஆரம் ஆறு என மொத்தம் 58 3/4 பவுன் நகைகள் திருடுபோயிருந்தது. இது சம்மந்தமாக நான் தருமபுரி நகர காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்னர் 13.12.2023ம் தேதியன்று எனது நகைகள் கிடைத்துவிட்டதாக காவல் நிலையத்திலிருந்து தகவல் சொன்னார்கள். நான் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி தான் எனது நகைகளை திருடியதாக போலிசார் அடையாளம் காட்டினார்கள். நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது நகைகளை பெற்றுக் கொண்டேன். இன்று என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகளை தான் நான் பெற்றுச் சென்றேன். **(மேற்படி நகைகள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. போலிசார் கூறியதின் பேரில் தான் எதிரியை எனக்குத் தெரியும் என்றாலும், எதிரி தான் நகையை திருடினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், பின்னிட்டு கேள்விப்பட்டு தான் வந்து புகார் கொடுத்தேன் என்றாலும் சரிதான். சம்பவத்தில் யார் ஈடுபட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் யாரிடமிருந்து எங்கு நகைகளை கைப்பற்றினார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். புகாரை நான் தான் எழுதிக் கொடுத்தேன். சம்பவயிடத்தின் அருகில் நிறைய வீடுகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனது அக்காள் பச்சியம்மாள் தான் தகவல் சொன்னார்.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.